**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 465/2023** Date: 11.08.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | சந்திரபாபு |
| Father's Name | : | ஏகாம்பரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 11.08.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தருமபுரி, புரோக்கர் அலுவலகத்திற்கு அருகில் குடியிருந்து வெங்காய மண்டி வைத்துள்ளேன். கடந்த 22.06.2023 ம் தேதி பகல் 2.30 மணிக்கு நான் எனக்கு சொந்தமாக ரித்திகா டிரேடிங் கடையில் வேலைசெய்யும் நடராஜன் என்பவரை பார்க்க சொல்லிவிட்டு சாப்பிடுவதற்காக வீட்டிற்கு சென்றிருந்தேன். நான் வீட்டிற்கு செல்வதற்கு முன்னதாக கடையின் கள்ளா பெட்டியில் ரூ.80000/- வைத்து பூட்டிவிட்டு சென்றேன். நான் வீட்டிலிருந்தபோது நாகராஜ் எனக்கு போன் செய்து தான் கடையிலிருந்தபோது ஒரு நபர் வெங்காயம் வாங்க கடைக்கு வந்ததாகவும், அந்த நபர் தன்னிடம் ரூ.20 கொடுத்து அருகிலுள்ள கடைக்கு சென்று டீ வாங்கிவரும்படி கூறியதை அடுத்து தான் டீக்கடைக்கு சென்றுவிட்டு திரும்ப வந்து பார்த்தபோது தன்னிடம் ரூ.20 கொடுத்து அனுப்பிய அந்த வெங்காயம் வாங்க வந்த நபர் அந்த இடத்தில் இல்லை என கூறினார். தகவல் தெரிந்து நான் கடைக்கு வந்து பார்த்தபோது நான் சாப்பிடசெல்வதற்கு முன்னதாக கடையின் கள்ளாபெட்டியில் நான் வைத்து சென்ற ரூ.80000/- ம் காணாமல் போயிருந்தது.

2. இதுசம்பந்தமாக நான் தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார்மனு அ.சா.ஆ.1 ஆகும்.** பின்னர் 04.07.2022 ம் தேதி போலிசார் அந்த நபரை பிடித்துவிட்டதாகவும், காவல் நிலையம் வந்து அடையாளம் காண்பிக்கும்படி கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்று நான் என் கடையில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்ததால் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து அவரை அடையாளம் காண்பித்தேன். ஆஜர் எதிரி தான்

நான் கண்காணிப்பு கேமராவில் பார்த்த நபர் மற்றும் காவல் நிலையத்தில் போலிசாரால் கைதுசெய்யப்பட்ட நபர் ஆவார். அவரிடமிருந்து ரூ.50000/- கைப்பற்றப்பட்டதாக போலிசார் கூறினார்கள். நான் நீதிமன்றத்தில் மனுசெய்து ரூ.50000/- யை பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. நான் வெங்காயக்கடை 2018 லிருந்து நடத்திவருகிறேன். நான் கொடுத்த புகாரில் எனது கடையின் பெயரை ரித்திகா டிரேடிங் என குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 22.06.2022 ம் தேதி என் கடையில் பணம் திருடுபோனது என்றால் சரிதான். நான் 04.07.2022 ம் தேதி தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் சம்பவம் நடந்த 22.06.2022 ம் தேதியே புகார் கொடுத்துவிட்டேன். 22.06.2022 ம் தேதி கொடுத்ததாக சொல்லப்படும் புகாருக்கு அன்றைய தினம் வழக்கு போலிசாரால் பதிவுசெய்யப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் புகார் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். போலிசார் என்னை 04.07.2022 ம் தேதி அழைத்தன்பேரில் சென்றேன்.

2. கடந்த 04.07.2022 ம் தேதி காவல் நிலையம் சென்றபோது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் டிப்ளமோ படித்துள்ளேன். புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை. எனது நண்பர் M. விஜி என்பவர் எழுதினார். புகார் எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் டிப்ளமா வரை படித்திருந்தும், புகாரை நான் கைப்பட ஏன் எழுதிக்கொடுக்கவில்லை என்றால், எனக்கு புகார் எழுதி முன் அனுபவம் இல்லை. அதனால் எனது நண்பர் விஜி என்பவரை வைத்து எழுதினேன். புகாரை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், அதிலுள்ள விபரங்களை எனது நண்பர் படித்து காண்பித்தார். நான் கடையில் ரூ.80000/- பணம் வைத்திருந்ததாக சொல்லும் பட்சத்தில் அதன் Denomination குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. கடந்த 12.07.2022 ம் தேதி காவல் நிலையம் சென்று எதிரியை அடையாளம் காட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 22.06.2022 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு நான் கொடுத்த புகாரின்பேரில் 04.07.2022 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ள பட்சத்தில் எதிரியை இந்த வழக்கில் சேர்ப்பதற்காக போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை இதற்கு முன்னதாக நான் பார்த்ததில்லை என்றும், முதன்முதலில் தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. எனது கடையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்படவில்லை என்றால் சரிதான், பக்கத்து கடையில் உள்ளது. போலிசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்து பார்த்தார்கள் என்றால் 22.06.2022 ம் தேதி மாலை நேரத்தில் பார்த்தார்கள். நேரம் குறிப்பிட்டு தெரியவில்லை. கடையிலிருந்த கள்ளாபெட்டியை போலிசார் புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.08.11 16:31:47 +0530